**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

<table>
<tr><td colspan="4">2024–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்12–ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>உய்யாராணி</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**19.8.2024 OS.No. 69/2019 வா.சா. 1உய்யாராணி ஆஜர்**

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 24.8.2022–ம் தேதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P(MD) No.21540/2016 என்று நான் தாக்கல் செய்த மனுவில் 1–ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டாவினை ரத்து செய்ய நான் தாக்கல் செய்த மனுவில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் 1–ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டா ரத்து செல்லாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி 1–ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டாவை மறுபரிசீலனை செய்வதற்கு மட்டும்தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

2) 3–ம் பிரதிவாதி சௌந்திரபாண்டி என்பவரும் டி.ஹரிராமமூர்த்தி என்பவரும் தாவா சொத்தை பொறுத்து அருள்மிகு மொட்டையா சுவாமி திருக்கோவிலுக்கு பட்டா வழங்குவது சம்மந்தமாக தங்களுக்கு ஆட்சபேணை இல்லை என்று வாக்மூலம் அளித்துள்ளார்கள் என்று நான் சாட்சியமளித்துள்ள நிலையில் அவர்கள் இந்த வழக்கில் தரப்பினராக உள்ளார்களா என்றால் இல்லை. அவர்கள் பெயரில் பட்டா இல்லை என்பதால் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. மேற்படி 3–ம் பிரதிவாதி சௌந்திரபாண்டி என்பவரும் டி.ஹரிராமமூர்த்தி என்பவர்களும் இவ்வழக்கில் தரப்பினர்களாக இல்லை என்பதால் அவர்கள் மொட்டையா சுவாமி கோவிலுக்கு பட்டா வழங்குவது சம்மந்தமாக ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள17.4.2022–ம் MP No.8/2021 மற்றும் 24/2021, MP No.5/2021 ஆகியவற்றில் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் சிவகங்கை அவர்களால் வழங்கப்பட்ட உத்தரவு, 28.7.2021ம் தேதியிட்டு MP 6/2021–ல் வழங்கப்பட்ட உத்தரவு ஒருதலைப்பட்ச உத்தரவு என்றால் அது கோவிலுக்கு பாத்தியபட்ட சொத்து

என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளபோது தாவா சொத்தின் பாத்தியத்தை பொறுத்து உரிமையியல் நீதிமன்றம்தான் தீர்மானிக்கமுடியும் என்றும், இந்து சமயஅறநிலையத்துறை, இணை ஆணையர் அவர்களால் வழங்கப்படும் உத்தரவு மூலம் தீர்மானிக்க முடியாது என்றால் சரியல்ல.
**(மறு விசாரணை இல்லை).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.